**டவர் மண்டப அரங்க மன்றம் - 2022**

----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டவர் மண்டப அரங்க மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்கள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, டவர் மண்டப அரங்க மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதி அறிக்கைகள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகங்களை மேற்கொள்ளும் தரப்பினர்களதும் பொறுப்புக்கள்.

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடிகள் அல்லது தவறான விடயங்களால் நிகழும் அளவிட முடியுமான போலியான அறிக்கைகளைத் தவிர்த்து நிதி அறிக்கைகளைத் தயாரிக்கத் தகுந்த வகையில் தேவையான உள்ளக நிர்வாகக் கட்டமைப்பை பேணுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது, மன்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் மன்றத்தை கலைப்பதற்கு எண்ணுமேயானால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமேயானால் அன்றி தொடர் இயங்கும் நிலைப்பாட்டின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதும் மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குரிய விடயங்களை தெளிவு படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடற் செயற்பாடு சம்பந்தமாக மீளாய்வுப் பொறுப்பு, அவை தொடர்பான தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், மன்றத்தின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதி அறிக்கைகள் தயாரிக்கப் படுவதற்கு ஏற்ற விதத்தில் சுய வருமாம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்மந்தமாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பாக அளவைக்குறிய நிச்சயமின்மை காணப்படுகின்றதா என்ற நிலை சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கியலுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான செற்பாடு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதிய நிச்சயமற்ற நிலை உள்ளது என நான் முடிவு செய்கின்றேன் எனில், நிதி அறிக்கைகளில் அவை தொடர்பானவற்றை வெளிப்படுத்துவதில் எனது கணக்காய்வு அறிக்கையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாரான வெளிப்படுத்துகை போதியதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக தொடர் செயற்பாடு இல்லாமல் போக முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

இயலுமான அளவுக்கு மற்றும் தேவைப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஆய்வு செய்யப்பட கணக்காய்வு விடயப் பரப்பு விரிவாக்கப் பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பிக்கப் படுதல் சம்பந்தமாகப் பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யப் படுவதற்கு ஏற்ற விதத்தில் அதன் அமைப்பு, தொகுதி, செயல்முறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் முறையாக மற்றும் அளவைக்குறிய விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதா எனவும், மற்றும் குறித்த தொகுதி, செயல்முறை, புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு எழுத்தாவணங்கள் பயனுள்ள விதத்தில் பேணப்பட்டு வருகின்றதா எனவும்;

- ஏதேனும் குறித்த எழுதப்பட்ட சட்டத்துக்கு அல்லது மன்றத்தின் கடடுப்பாட்டு சபையால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைக்கு ஏற்ப, மன்றம் செயற்பட்டுள்ளது எனவும்,

- தனது அதிகாரம், நிலைமை மற்றும் செயற்பாடுகளுக்கு உட்பட்டதாக செயலாற்றியுள்ளமை பற்றியும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்றிறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்தில் கால வரையறைக்குள் மற்றும் குறித்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கப்பட்ட வளங்கள் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப் பட்டுள்ளன எனவும்,

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு**

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பான கணக்களி பொறுப்பை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் ஆதனங்களுக்குள் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்களி பொறுப்பை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால வரையறைக்குள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படின் அவை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுத்தல் போன்றவற்றுக்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதற்குப் போதுமான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கியற் கட்டுப்பாடுத் தொகுதி ஒன்றை நிறுவனம் நடாத்திச் செல்வது மிக முக்கிய விடயமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | குறித்த நியமத் தொடர்புடன் கூடிய இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 80 (இ) பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களிற்குள் தீர்க்கவுள்ள பொறுப்புக்கள், நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட 2023 ஆண்டில் ஓய்வூதியம் பெறவுள்ள மூன்று ஊழியர்களுக்கான ரூபா 1,345,805 ஆன பணிக்கொடை ஒதுக்கம், நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான ஓய்வு பெறுதல்களுக்காக பணிக்கொடை ஒதுக்கம் கணக்குகளினுள் சரியாக செம்மையாக்க குறித்துக் கொண்டேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பிரதாக அலுவலக காணி மற்றும் கட்டிடங்கள் உள்ளட்களாக 2022 திசெம்பர் 31 திகதியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 942,000,000 ஆன மன்றத்திற்கு சொந்தமான 03 காணிகள் மற்றும் ரூபா 584,828,968 ஆன 05 கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 பந்தி பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இம் மீள்மதிப்பீட்டு நடடிவடிக்கைக்கு தேவையான மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ள ஆரம்ப நடவக்கைகள் 2022 ஆண்டில் மேற்கொண்டு உள்ளதுடன் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தேவையான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2022 ஆண்டில் நாட்டில் நிலவிய கலவர நிலைமையால் ஏற்பட்ட அரச ஆதன சேத மதிப்பீட்டு நடவடிக்கைகள் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதால் எமது நிறுவன மதிப்பீட்டு நடவடிக்கைகளை 2022 இறுதிப் பகுதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் அறிவித்த போதும் இது வரை அந் நடடிக்கை இடம்பெறாததால் மீண்டுமொரு முறை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும் இம் மதிப்பீட்டு நடவடிக்கையை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2023 ஆண்டில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | |
| (இ) | சேவைக் காலம் 05 ஆண்டுகளை பூர்த்தி செய்யாத எனினும் மீளாய்வாண்டளவில் தொடர்ச்சியாக 12 மாத காலம் சேவையாற்றிய ஊழியர்கள்/ அலுவலர்கள் பத்து பேர்களிற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 62 பந்தியின் பிரகாரம் 2022 ஆண்டிற்காக ரூபா 230,375 ஆன பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 12 பந்தியின் பிரகாரம் பெறுமானத் தேய்விட முடியுமான சொத்துக்களிற்குரிய அரச மானியம், குறித்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவிற்கு விகிதாசார ரிதியான காலப் பகுதிக்குள் இலாபததிற்கு அல்லது நட்டத்திற்கு பிற்போடப்பட்ட செலவாக இனங்காண வேண்டிய போதும் மன்றத்தினால் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 47,344,638 ஆன பிற்போடப்பட்ட செலவுகளை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | டவர் மண்டப அரங்க மன்றத்திற்குரிய 2017 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 161,750,000 பெறுமதியான பிரதான அலுவலக கட்டிடம் மற்றும ரூபா 1,250,000 ஆன ஒலிக்கூடத்திற்காக 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலத்திற்குரிய பெறுமானத் தேய்வு செம்மையாக்கப்பட்டு இருக்காததால் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 81,500,000 இனால் குறைத்து மற்றும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | ஒலிக்கூடம் மற்றும் கட்டிடம் 2022 ஆண்டிலிருந்து பெறுமானத் தேய்விட்டு கணக்கீடு செய்ய ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டிற்காக சீராக்கம் செய்யப்படவில்லை. 2023 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கடந்த ஆண்டு சீராக்கத்தினூடாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யப்பட் திகதி முதல் அதற்குரிய பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்ய நடடிவக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று பணிக்கொடை ஒதுக்க கணக்கின் மீதி ரூபா 23,196,800 ஆன போதும், அதற்கு நேரொத்த நிலையான வைப்புக்களில் முதலீட்டு பெறுமதி ரூபா 20,752,432 ஆனது. | பணிக்கொடைக்காக நிதி ஒதுக்கீடு செய்தல் நிதி நெருக்கடியின் மீது கடந்த சில ஆண்டுகளாக இடம்பெறவில்லை. 2023 ஆண்டில் அதற்காக ஒதுக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் இரண்டில் ரூபா 7,250,432 ஆன நிலையான வைப்பை ரூபா 8,000,000 வரை அதிகரித்து, வருடாந்த வட்டி வகிதம் 30% ஆன அதிக வட்டியுடன் அரச வங்கியொன்றில் மாதாந்த வட்டியை பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் 05 ஆண்டுகளிற்கு முதலீடு செய்யப்பட்டது. 2023 ஆண்டு முதல் அந்த நிதி ஒதுக்க நிலுவையை வருடாந்த வட்டி வருமானத்தால் தீர்த்துக் கொள்ள முடியுமாகும். | பதிலில் குறிப்பிடுவதன் பிரகாரம் முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பணிக்கொடை செலுதத்துதல் ரூபா 1,642,130 ஆகக் காட்டப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் செலுத்திய பணிக்கொடை பெறுமதி ரூபா 1,709,865 ஆனதில் பணிக்கொடை செலுத்தல் ரூபா 67,735 தொகை குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஒதுக்கீட்டின் போது ரூபா 67,735 தொகை கடந்த ஆண்டு குறைவாக ஒதுக்கீடு இடம் பெற்றுள்ளது. அந்த பணிக்கொடை செலுத்தும் போது கடந்த ஆண்டு சீராக்கத்தினூடாக செய்யப்பட்டுள்ளது. அதனை இறுதிக் நிதிக்கூற்றின் 22 இலக்க பக்கதில் கடந்த ஆண்டு சீராக்கத்தினுள் காட்டப்பட்டுள்ளது. அதனால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது பணமாக செலுத்திய பெறுமதியை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்ட வேண்டும். |
| (ஈ) | ஒதுக்கல் கணக்கிற்கு செம்மையாக்கியிருந்த சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் மீது உருவான இலாபம், காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உட்படாத போதும் 2022 ஆண்டில் வாகன மீள்மதிப்பீட்டினூடாக உருவான ரூபா 34,670,000 ஆன இலாபம், காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக காண்பிப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | பணத்தினால் உருவாகாத இலாபத்தை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டியதனை சரிசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கத்தின் கீழ் நடனக் களைஞர்களுக்கான சனாதிபதி நலன்புரி நிதியத்தின் மீதி ரூபா 60,399,700 ஆன போதும் குறித்த நலன்புரி நிதியத்தின் பெயரிலான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 70,999,700 ஆனது. அதன் பிரகாரம் நிதியத்தின் மீதி ரூபா 10,600,000 குறைவாகக் காட்டப்பட்டதுடன் அதற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | இறுதிக் கணக்குகளில் ஒதுக்கத்தின் கீழ் ரூபா 60,399,700 ஆகக் காட்டப்பட்டிருப்பது சனாதிபதி நலன்புரி நிதியத்திற்கு அவ்வப் போது கிடைத்த தொகைகளின் கூட்டுத் தொகைகளாகும். அதனை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து அவற்றிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தால் களைஞர்களுக்கு நலன்கள் செலுத்திய பின்னர் எஞ்சுகின்ற மேலதிக நிதியை மீண்டும் முதலீடு செய்து அத் தொகை ரூபா 70,999,700 வரை வளர்ந்துள்ளது. தற்போது அந்த மேலதிக தொகையான ரூபா 10,600,000 இறுதிக் கணக்குகளில் ஒதுக்கத்தின் திரண்ட இலாபத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2023 ஆண்டில் அத் தொகையை திரண்ட இலாபத்திலிந்து சனாதிபதி நலன்புரி நிதியத்திற்கு மாற்ற தேவையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | நிலையான வைப்புப் பெறுமதிக்கு ஒப்பாக நிதியத்தின் மீதியை பேணிக் கொள்ள வேண்டியதுடன் வருடாந்தம் எஞ்சுகின்ற மேலதிக தொகையை முதலீடு செய்யும் போது திரண்ட இலாபத்திலிருந்து அகற்றி நிதியக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். |
| (ஊ) | டவர் தொழிலாளர் சங்க நிதியத்தின் மீதி ரூபா 276,900 ஆன போதும் குறித்த நிதியின் பெயரிலான நிலையான வைப்புத் தொகை ரூபா 100,000 ஆகும். அதன் பிரகாரம் நிதியத்தின் மீதியுடன் ஒப்பிடுகையில் வைப்புத் தொகை ரூபா 176,900 குறைவாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கடந்த ஆண்டு கணக்காய்வு அறிக்கை ஊடாகவும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் இந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இறுதி கணக்குகளில் ஒதுக்கத்தின் கீழ் தொழிலாளர் சங்கம் எனும் பெயரில் ரூபா 276,900 ஆன தொகை காணப்பட்ட போதும், அது தற்போது டவர் தொழிலாளர் சங்க நிதியம் என்ற பெயரில் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் ரூபா 717,015/- ஆன மீதியொன்று காணப்பட்டது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாடகப் பாடசாலையில் தயாரிக்கப்பட்ட நாடகங்களைக் காண்பிப்பதன் மூலம் கிடைத்த வருமானம் கணக்கில் சேர்க்கப்பட்டு இந்த மீதி உருவாகியுள்ளது. இதற்கு | நிலையான வைப்புப் பெறுமதிக்கு ஒப்பாக நிதியத்தின் மீதியை பேணிக் கொள்ள வேண்டியதுடன் வருடாந்தம் ஒன்றுசேரும் வட்டித் தொகையை திரண்ட இலாபத்திலிருந்து அகற்றி நிதியக் கணக்கிற்கு மாற்ற வேண்டியதுடன் செலவினத்திற்கு ஏற்ற நிதித் |

| | | | |
|---|---|---|---|
| | | மேலதிகமாக ரூபா 100,000 தொகையொன்று நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சேமிப்புக் கணக்கின் மீதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாதது நாடக தயாரிப்பதற்கு பல்வேறு செலவுகளை செய்ய வேண்டி ஏற்படக் கூடும் என்பதனால் ஆகும். எனினும் 2023 ஆம் ஆண்டில் அத் தொகையை திரண்ட இலாபத்திலிருந்து டவர் தொழிலாளர் சங்க நிதியத்திற்கு மாற்ற தேவையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். | தொகையொன்றை மாத்திரம் சேமிப்புக் கணக்கில் நிறுத்திக் கொண்டு மீதியை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 22,010,386 ஆன போதும் அட்டவணை பிரகாரம் வட்டி வருமானம் ரூபா 21,461,065 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைக்கிடையில் ரூபா 549,321 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிலையான வைப்பு வட்டி கணக்கிடும் போது சில வங்கிகள் நாட்கணக்கிற்கு வட்டி தயாரிப்பதுடன் சில வங்கிகளால் மாதத்திற்கு உரியதாக வட்டி வழங்கப்படுகிறது. அதனால் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் தயாரிக்க சுட்டிக் காட்டப்பட்ட ஆவணம் (இறுதிக் கணக்கு அட்டவணை) மற்றும் உள்ளவாறு வட்டி பெறுவனவிற்கு இடையில் வித்தியாசம் காணப்படுகிறது. | காலப் பகுதிக்குரிய நாட் கணக்கின் பிரகாரம் வட்டி வருமானத்தை சரியாக கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புக்களிற்கான வட்டி வருமானம் ரூபா 14,082,645 ஆன போதும், 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அது ரூபா 14,202,278 ஆக காட்டப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டின் வருமானம் ரூபா 119,633 இனால் கூடுதலாக காட்டப்பட்டு இருந்தது. | மேலே ''ஐ'' இல் குறிப்பிடப்பட்ட பதில். | வட்டி வருமானத்தை சரியாக கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | 2022 சனவரி 01 திகதி ஜர்னல் வவுசர் ஒன்றின் மூலம் கணக்குகளில் ஆரம்ப மீதி முன்கொண்டுவரப்பட வேண்டிய போதும் மன்றத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | ஆரம்ப மீதிகளை கணக்குகளில் முன்கொண்டுவரும் போது ஜர்னல் வவுசர் ஒன்றின் ஊடாக மேற்கொள்ள வேண்டும். |

**1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஒதுக்கம் | 79,368,600 | பல வருட காலமாக கணக்குகளில் முன் கொண்டு வரப்படும் 05 கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள்/ கோவைகள்/ பதிவேடுகள். | இவ் அனைத்து மீதிகள் தொடர்பாக ஆரம்பம் முதல் தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளை மீண்டுமொறு முறை பரீட்சித்துப் பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் அறிவுறுத்தல் கிடைத்தது. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சௌசிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள தரைப்பகுதியை மன்றத்திற்கு ஒப்படைத்தல் தொடர்பான 1980 ஒக்தோபர் 08 திகதிய விஷேட ஒப்படை பத்திரத்தின் விதி முறைகள் | i. இந்த நிலம் மற்றும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் தேசிய நடன நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளிற்கு அன்றி ஏனைய செயற்பாடுகளிற்கு பயன்படுத்தக் கூடாது எனவும் அச் செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படாவிட்டால் அதன் போது அது சனநாயக சோசலிச குடியரசிற்கு திருப்பி ஒப்படைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மன்றத்திற்கு சொந்தமான சௌசிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள தரைப்பகுதியை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு 02 | டவர் மண்டப அரங்க மன்றமானது சட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான நிதியை திரட்டும் நோக்கில் டவர் மண்டப அரங்க மன்றத்திற்கு சொந்தமான எந்தவொறு ஆதனம், கட்டிடம், நிலத்தை குத்தகை வழங்கல், விற்பனை ஆகிய விடயங்களுக்காக நம்பிக்கை பொறுப்பு சபைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | விஷேட ஒப்படை பத்திரத்தின் விதி முறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களில் 30 வருடங்கள் வீதம் குத்தகைக்கு வழங்கப்பட்டு இருந்தது. | | |
| ii. முறையான அங்கீகாரம் மற்றும் முறையான நியமனமொன்று கிடைக்காத பணிப்பாளர் நாயகம் ஒருவர் கையொப்பமிட்ட சட்டரீதியற்ற எழுத்துமூல குத்தகை உடன்படிக்கை ஒன்றின் மூலம் 30 ஆண்டு காலத்திற்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு மீண்டும் குத்தகை வழங்கியது தொடர்பாக 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் CAA/A/THTF/2021/05/Q10 கொண்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு உரியதாக 2023 சனவரி 09 திகதிய பதில் கடிதம் மூலம் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் இந்த தவறை சரிசெய்வதாக குறிப்பிட்டிருந்த போதும் அவ்வாறு சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2014 ஆண்டிலிருந்து உடன்படிக்கை காலம் முடிவடைந்தமை தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் சௌசிரிபாய கட்டிடத்தை ஒப்படைக்காது அமைச்சின் செயலாளர்களின் மட்டத்தில் பொறுபுச் சபை தீர்மானங்களிற்கு முரணாக உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளமை தவறு என ஏற்றுக் கொள்கிறேன். அந்த தவறை சீர்செய்து கொள்ள தற்போது பிரதமரின் தலைமையில் ஒரு கூட்டமும், பிரதமரின் செயலாளர் உள்ளடங்களாக அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவன தலைவர்களுடன் இன்னுமொறு கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளது. அரச சொத்தொன்றை மற்றும் 02 அரச நிறுவனங்களை நடாத்திச் செல்லும் கட்டிடமொன்றிற்கு உரிய சிக்கல் ஒன்றாகையால் சட்ட நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் இல்லையென தயவுடன் குறிப்பிடுகிறேன். | மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் விரைவில் புதிய குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | iii. மன்றத்தினால் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட அடிப்படை குத்தகை ஒப்பந்தத்தில், குத்தகை பெறுனர்களிற்கு முழுமையான குத்தகை ஆதனம் அல்லது அதன் ஒரு பகுதியையோ உப குத்தகை வழங்க அதிகாரம் உள்ளது, எனும் நிபந்தனை உள்ளிட்ட சரத்தொன்றை மன்றத்திற்கு பாதகமான வகையில் உள்ளடக்கிய காரணத்தால் அந்த அதிகார சபையினால் 2017 சதர அடி பரப்பை 2021 ஜுலை 01 திகதி முதல் 2023 ஜுன் 30 திகதி வரையான காலப் பகுதிக்கு நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு (CGF) ரூபா 227,000 ஆன மாதாந்த வாடகைக்கு உப குத்தகை வழங்கப்பட்டு இருந்தது. மேலும் அந்த அதிகாரசபைக்கு குத்தகை வழங்கியிருந்த கட்டிடத்திற்குரிய கேட்போர் கூடத்தையும் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினரிற்கு விழங்கப்பட்டிருந்தது. | குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது பழைய உடன்படிக்கையில் உள்ள உப குத்தகை வழங்கும் நிபந்தனைகளை அகற்றி வேறு நிறுவனங்களிற்கு குத்தவை வழங்குதல் மன்றத்தினால் மாத்திரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | தயாரித்திருந்த மன்றத்தின் வருடாந்த பெறுகைகள் திட்டத்தினுள் மீண்டெழும் நிகழச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பெறுகைகள் திட்டத்தை உள்ளடக்கி இருக்கவில்லை. | 2023 ஆண்டில் பெறுகைகள் உரியவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. | அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு | வருடாந்த வரைபு அறிக்கை மற்றும் கணக்குகள், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதும் மன்றத்தினால் 2022 | நம்பிக்கை பொறுப்பு சபைக் கூட்டங்களை நடாத்த தாமதித்ததால் நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைநூலின் 6.6 பந்தி | ஆண்டிற்குரிய கணக்குகள் 2023 மே 19 திகதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்தன. | 2022 இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க தாமதித்த போதும் 2023 மார்ச் மாதம் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்திற்கு இறுதிக் கணக்குகளை சமர்பித்து அதன் வரைபு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டது. 2023 ஆண்டு முதல் தாமதமின்றி சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| தேவையான மேலதிக நிதி அளவை பெற்றுக் கொள்வதனை புதிய மூலோபாயத்தின் மூலம் மேற்கொள்ள முடியுமென குறிப்பிட்டு ரூபா 3,000 ஆகவிருந்த ஓய்வூதிய கொடுப்பனவை ரூபா 7,500 வரை அதிகரிக்க இலக்கம் 2019/294/03/01 கொண்ட நம்பிக்கை பொறுப்பு சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் கணக்காய்வு திகதியளவிலும் எவ்வித புதிய மூலோபாயத்தையும் இனங்கண்டு இருக்காததுடன் இதன் காரணமாக 2022 ஆண்டிற்காக சனாதிபதி நலன்புரி நிதியத்தின் ரூபா 7,435,500 ஆன படிகளை செலுத்த நிதயத்தின் வைப்பு வட்டி வருமானம் போதாத காரணத்தால் 07 சந்தர்ப்பங்களில் மன்றத்தின் இலக்கம் 2327541 கொண்ட | அன்றைய பிரதமர் அவர்களின் முடிவை நம்பிக்கை பொறுப்பு சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. குறித்த பத்திரத்தில் புதிய மாற்று மூலோபாயத்தை எடுக்குமாறு உத்தேசிக்கப்பட்ட போதும் அவ்வாறான எவ்வித மூலோபாயமும் மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை. சனாதிபதி நலன்புரி நிதியத்திற்கு அவ்வப் போது அரச மானியம் கிடைத்த போதும் கடந்த ஆண்டுகளில் அந்த அரச மானியமும் கிடைக்கவில்லை. சனாதிபதி நலன்புரி நிதியத்தியத்தின் பிரதான வருமான மூலங்கள் 02 ஆகும்.<br><br>01.நிலையான வைப்பு வட்டி வருமானம்.<br><br>02.நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்துடன் டவர் மண்டப அரங்க மன்றத்திற்கு கலைபுற காணிகள் குறித்த கலைஞர்களினால் விற்பனை | புதிய மூலோபாயமாக எஞ்சிய நிதியை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதாக குறிப்பிட்டுள்ள போதும் நிலையான வைப்பு முதலீட்டு வட்டி ஏற்ற இறக்கமாவதால் வேறு மாற்று வழிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | |
|---|---|---|
| நடைமுறைக் கணக்கில் இருந்து ரூபா 1,816,000 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. | செய்வனூடாக கிடைக்கும் தொகையின் 10% ஆன தொகை,<br><br>எவ்வாறாயினும் தற்போது புதிய மூலோபாய வழிகள் பெறப்பட்டுள்ளன. தற்போது நிலையான வைப்புக்களிற்கு உயர் வட்டி வருமானம் கிடைப்பதால் அந்த வருமானத்திலிருந்து நலன்புரி செலவுகளை செலுத்திய பின்னர் எஞ்சுகின்ற தொகையிலிருந்து புதிய நிலையான வைப்புக்களை ஆரம்பித்து நிதியத்தை வளர்த்து கொண்டு வரப்படுகிறது. அதனால் எதிர்காலத்தில் வட்டி வருமானம் வீழ்ச்சியடைந்தாலும் அந்த நலன்புரி செலவுகளை செலுத்தும் போது நிறுவனத்தின் காசுப் பாய்ச்சலிற்கு பாதிப்பின்றி நடாத்திச் செல்லும் இயலுமை காணப்படுகின்றது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 80,792,883 ஆன பற்றாக் குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 77,244,487 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,548,396 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய படிகள், எரிபொருல் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் செலவினம், பழுதுபார்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள், மின்சார செலவினம் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் செயற்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப அரங்க மன்ற சட்டத்தினை காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டவர் மண்டப அரங்க மன்ற சட்டத்தினை திருத்த அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு அதற்காக குழுவொன்றை நியமித்து நிகழ்காலத்திற்கு ஏற்வாறு திருத்தங்கள் உள்ளடக்கப்பபடன. தற்போது திருத்தங்கள் உள்ளடங்கிய சட்ட நகலானது சட்ட நகழ் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத் திணைக்களத்திலிருந்து கிடைத்த பின்னர் அமைச்சரவைக்கு மற்றும் | விரைவில் சட்டத்தை திருத்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பாராளமன்றத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் இந்த பணியை பூர்த்தி செய்ய முடியுமென தயவுடன் குறிப்பிடுகிறேன். | |
| (ஆ) | ரூபா 3,000 ஆக காணப்பட்ட கொடுப்பனவை ரூபா 7,500 ஆக உயர்த்திய காரணத்தால் தற்போது நிதியம் இருக்கின்ற பயனாளிகளுக்கும் உதவித் தொகையை செலுத்துவதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதுடன் 2014 ஆண்டு முதல் விண்ணப்பங்களை சமர்ப்பித்த 50 இற்கு மேற்பட்ட நாடக கலைஞர்கள் ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியாமல் பல ஆண்டுகளாக பொறுத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டியிருந்தது. இந்த நிதியம் தொடர்பில் சரியான தீர்மானங்களை எடுக்காதமை மற்றும் நிதியத்தை உரியவாறு முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்காதமையால் சனாதிபதி நலன்புரி நிதியத்தை ஸ்தாபித்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள கடந்த பல ஆண்டுகளாக இயலாதுள்ளமை அவதானிக்கப்படுகிறது. | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது நிதியத்தை சரியாக முகாமைத்துவம் செய்துள்ளதுடன் நிதியத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி சாத்தியப்பாடு தொடர்பாக கவனத்திற் கொண்டு நிதியத்தை வளர்த்துக் கொள்ளும் முறைகளை எற்படுத்திய பின்னர் படிகளை உயர்த்த நடவடிக்கை எக்க வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு முரணாக ‘‘பராமரிப்பாளர்’’ பதவிக்கு தகுதியற்ற ஒருவர் இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார். | நிறுவனத்தை நடத்துவதற்குத் தேவையான இந்த தொழில்நுட்ப பதவியை நிரப்புவதற்கு பல ஆண்டுகளாக பத்திரிகை விளம்பரங்கள் வெளியிட்டு ஆட்சேர்ப்பதற்கு ஆயத்தப்படுத்தியிருந்த போதும் தகுதியான எவரும் முன்வரவில்லை என்பதை குறிப்பிடுகிறேன். இதன் பிரகாரம் இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய NVQ 4 இனை பூர்த்தி செய்துள்ள இந்த விண்ணப்பதாரர் பராமரிப்பாளராக ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் ஆட்சேர்ப்பு திட்டத்திலும் NVQ 4 தகுதியுடைய ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு இல்லையெனில் ஆட்சேர்ப்பு திட்டத்தை திருத்திய பின்னர் குறித்த ஆட்சேர்ப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |